மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தந்தை பெரியார், அண்ணா, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன் (நகர்ப்பிரிவு), பல்லவன் (புறநகர்ப் பிரிவு), போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்களை பங்குதாரர்களாக நடைமுறைப் படுத்தும் செயற் குறிப்பு இருந்து வருகிறது.

இணைப்புச் சாலைகள்.

* 604 வினா— திரு. கோ. இளங்கோவன் : மாண்புமிகு போக்குவரத் துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா:

(அ) இணைப்புச் சாலைகளை அமைத்துத் தருவோருக்கு "Bus Route" வழங்குகின்ற புதிய திட்டத்தின் கீழ் அமைத்த சாலைகளின் மொத்த தூரம் எவ்வளவு ?

(ஆ) அதன் மூலம் உண்டாக்கப்பட்ட புதிய (Route) வழித்தடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. இளங்கோவன் : இத்திட்டத்தை அறிவித்து மாதங்கள் பல ஆகிவிட்டன. என்றாலும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்போது பரிசீலனை முடியும் ? எப்போது அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராமப்புறங்களிலும் பொது மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது அரசாங்கத்தின் முக்கிய திட்டங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ மூவாயிரத்துக்கு மேற்பட்ட கிராமப்புறச் சாலைகளை செப்பனிடுவதற்கும் அந்தச் சாலைகளில் பேருந்துகள் செல்கிற வகையிலும் நல்ல முறையில் கொண்டு வருவதற்கு ஏராளமான பொருள்செலவு தேவையாக இருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் சாலைத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்குகிற நேரத்தில் கோர் செக்டார் என்ற பிரிவில் ஒதுக்காமல் இருப்பதால் நிதித் தட்டுப்பாடு மாநில அரசுக்கு மிகுதியாகிறது.

ஆகவே, பணம் படைத்தவர்கள், வசதி படைத்தவர்கள் சாலைகளை அமைக்க முன்வந்தால் அவர்களுக்கு உதவவேண்டும் என்ற நல்லநோக்கோடு செயல்முறைக்கு கொண்டுவர ஒரு குறிப்பினை நடைமுறைப்படுத்த இருக்கிறது. பன்றிமலைப் பகுதியில் 12 மீட்டர்க்கு சாலை அமைக்க ஒரு தனியார் முன்வந்து,

அதோடு நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம்—லாபத்தில் நடக்கிறவை—ஆகியவையும் பொதுமக்கள் நலன்கருதி இத்தகைய சாலைகள் அமைக்க முன்வந்திருக்கின்றன:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

(முற்பகல் 10-00)

திரு. ப. சந்திரன் : என் தொகுதியில் சேத்துப்பட்டிலிருந்து தேசூர் வரை தனியார் பேருந்து ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. இன்னொரு தனியார் நீதிமன்றத்தில் ஸ்டே வாங்கிவிட்டதால் அந்த ரூட்டில் இப்போது அந்தப் பேருந்து செல்லாமல் இருக்கிறது. அப்படி பேருந்து செல்லாதிருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு மெயின்ரோடு போக வேண்டுமென்றால் குறைந்த பட்சம் ஐந்து மைல்கள் நடந்து செல்லவேண்டியிருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் அரசுப் பேருந்து ஒன்றை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே கூறினார்கள். அந்த வழித்தடம் நிறுத்தப்பட்டிருப்பதற்கு காரணம் உயர்நீதி மன்றத்தில் தடையிருப்பதன் காரணமாகத்தான் என்பதை. இருந்தாலும் போக்குவரத்து கழகத்தின் மூலமாக டெம்பரெரி பெர்மிட் மூலமாக இந்த வழித்தடத்தில் பேருந்துகள் விட முடியுமா என்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : இப்படி சாலை அமைத்துக்கொடுக்கிறவர்களுக்கு பஸ் ரூட் கொடுக்கப்படும் என்று முன்னால் இங்கு அறிவிக்கப்பட்டதில், அதை அமல் நடத்துவதில் அப்படிப்பட்ட திட்டத்தில் பல சிக்கல்கள் இருப்பதாக இங்கு அமைச்சர் அவர்களே தெரிவித்தார்கள். இவற்றையெல்லாம் முன்னாலேயே ஆராய்ந்து விட்டு அல்லவா அவையில் இதைச் சொல்லியிருக்க வேண்டும் ? 'வரும்பொருள் உரைத்தல்—மந்திரிக்கு அழகு' என்று சொல்வார்கள். அது போல் இத்திட்டத்தை சபையில் அறிவிப்பதற்கு முன்னாலேயே ஏன் ஆராய்ந்து பார்க்கவில்லை, ஆராய்ந்து பார்க்காமல் அறிவித்து விட்ட இந்த திட்டம், இப்போதாவது கைவிடப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் கூறிய பதிலை உன்னிப்பாக கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்தத் திட்டத்தில் எந்தவிதமான சிக்கலும் இல்லை, நடைமுறைப்படுத்துவதில் இருக்கின்ற பொரு

ளாதாரத்தில் தான் சில சிக்கல்கள் இருப்பதாக கூறினேன். இருந்தாலும் இத்திட்டத்தை படிப்படியாக செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் முக்கிய மான தகவல்களை கேட்டுத்தெரிந்துகொள்வதற்குத்தான் அமைச் சர்களிடம் கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்படியில்லாமல் இத்திட்டம் கைவிடப்பட்டது என்று அறிவிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்களிடம் கேட்பது சரியல்ல. மேலும் தகவல் களைத் தெரிந்துகொள்வதற்குத்தான் கேள்விகளைக் கேட்க வேண்டும்.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு துரைமுருகன் இருக்கை யில் இருந்து கொண்டே பேசுகிறார்கள். நான் வேண்டுமென்றால் அமர்ந்து கொள்கிறேன். ஏதாவது பேசவேண்டுமென்றால் தயவு செய்து எழுந்து நின்று பேசுங்கள்.

வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையில் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒழுங்குப் பிரச்னை.

பேரவைக்கு ஓர் உறுப்பினர் அன்னியர் ஒருவரை அழைத்து வந்ததாக சில நாளேடுகளில் வந்துள்ள செய்தி குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப விரும்புகிறேன். இதை ஒழுங்குப் பிரச்னையாகவும், ஒரு உரிமைப்பிரச்னையாகவும் எழுப்ப விரும்பு கிறேன். இதை நான் 184 ஆவது விதியின் கீழ் எழுப்புகிறேன். நேற்றைய தினம் நான் சட்டமன்றத்தில் காலை 11 மணி முதல் இறுதிவரையிலும் இங்கு இல்லை. அப்படியிருந்த நிலையில், இங்கு ஒரு அதிசய மனிதர் வந்ததாகவும், அவரை நான் சபைக்கு அழைத்துக்கொண்டு வந்ததாகவும் பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த பத்திரிகையில் வந்திருக்கிறது?